# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

---

*(2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஒற்றோபர் மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 40 /2007*

**குறித்தசில வியாபாரப் பண்டங்களின் குறித்தசில இலாபங்களின்மீது பல்லின வரிகளின் பிரயோகத்துடனும் நிர்வாகத்துடனும் தொடர்புடைய சிக்கல்களைத் தாண்டுவதற்கு ஒரு வரி, தீர்வை அறவீடு, சுங்கத் தீர்வை அல்லது வேறு ஏதேனும் அறவீடு என்ற வகையில் அத்தகைய வியாபாரப் பண்டங்களின் குறித்தசில இனங்கள்மீது விதிக்கப்படற்பாலதான தொகைக்குப் பதிலாக அத்தகைய வியாபாரப் பண்டங்களின் குறித்தசில இனங்கள் மீது கூட்டு அறவீடொன்றின் விதிப்பனவுக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

*விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் விதிப்பனவு.*

**2.** (1) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் வியாபாரப் பண்டங்களின் குறித்தசில இனங்கள்மீது “விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு” என அழைக்கப்பட வேண்டியதும் அமைச்சரால் காலத்திற்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையால் குறித்துரைக்கப்பட வேண்டியதுமான அறவீடொன்று விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டளை ஒவ்வொன்றினதும் செல்லுபடியாகும் காலப்பகுதியும் மற்றும் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு இனம் தொடர்பிலும் விதிப்பனவு செய்யப்படவேண்டிய விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் வீதமும், ஒன்றில் விலை மதிப்பீட்டின் அடிப்படையிலோ அல்லது குறித்துரைக்கப்பட்ட அடிப்படையிலோ கட்டளையில் குறித்துரைக்கப்படுதலும் வேண்டும்.

2 –PL 002379 – 1,200 (2007/08)

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட முப்பது நாட்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாகும் கட்டளை ஒவ்வொன்றும் அதில் ஏதேனும் இனத்தைச் சேர்ப்பதன்மூலம் அல்லது அதிலிருந்து ஏதேனும் இனத்தை அகற்றுவதன்மூலம் அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை மீளாய்வு செய்வதன்மூலம் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும் அது ஆக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடியும்வரை திருத்தப்படவோ அல்லது வேறுபடுத்தப்படவோ இயலாததாக இருக்கும்.

(5) அவ்வாறு விதிக்கப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீடானது கூட்டு அறவீடொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வெளியிடப்பட்ட ஏதேனும் கட்டளை வலுவிலிருக்கும் காலப்பகுதியின்போது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சட்டங்களின் நியதிகளின்படி விதிப்பனவு செய்யப்பட்ட வேறு வரி, தீர்வை, விதிப்பனவு அல்லது சுங்கத் தீர்வை அல்லது வேறு ஏதேனும் அறவீடு ஏதேனும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வியாபாரப் பண்டத்தின் இனங்கள் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது.

*விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் சேகரிப்பும், நிருவாகமும் மற்றும் அறவாக்குதலும்.*

**3.** இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சட்டங்களின் நியதிகளின்படி ஏதேனும் வரிக்கு, தீர்வைக்கு, அறவீட்டிற்கு, சுங்கத் தீர்வைக்கு அல்லது வேறு விதிப்பனவுக்குப் பதிலாக 2 ஆம் பிரிவின்கீழ் விதிப்பனவு செய்யப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீடானது, இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கவும், நிர்வகிக்கவும் மற்றும் அறவிடவும்படுதலும் வேண்டும்.

*விசேட வியாபாரப் பண்ட அறவீடு திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதல்.*

**4.** சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் நியதிகளின்படி விசேட வியாபாரப் பண்ட அறவீடு என்ற வகையில் அவரால் சேகரிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் திரட்டு நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும்

**5.** (1) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அமைச்சர், அப்போதைக்கு நிலவும் பொருளாதார ஏதுக்களின் காரணமாக அவ்வாறு செய்வது உசிதமானது என அபிப்பிராயப்படுமிடத்து, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இனம் தொடர்பில் 2 ஆம் பிரிவின்கீழ் விதிப்பனவு செய்யப்படற்பாலதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையால் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட வேண்டியவொரு காலப்பகுதிக்குத் தள்ளிவைக்கலாம்.

*அமைச்சர் குறித்தசில வியாபாரப் பண்டங்களின் மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டைத் தள்ளி வைக்கலாம்.*

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி வெளியிடப்பட்ட ஏதேனும் கட்டளை வலுவிலிருக்கும் காலத்தின்போது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சட்டங்களின் நியதிகளின்படி விதிப்பனவு செய்யப்பட்ட வேறு வரி, தீர்வை, அறவீடு அல்லது சுங்கத்தீர்வை எதுவும் அல்லது வேறு ஏதேனும் விதிப்பனவு எதுவும் அத்தகைய ஏதேனும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் இனங்கள் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது.

**6.** ஏதேனும் விபாயாரப் பண்டத்தின் இனம் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கு அமைவாக்கப்படுமிடத்து அத்தகைய வியாபாரப் பண்டத்தின் இனம் தொடர்பில் ஏற்புடைத்தான வீதம் கப்பல் நுழைவுப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் நேரத்தில் அத்தகைய இனத்திற்கு ஏற்புடையதாகின்றவாறான அத்தகைய வீதமாதல் வேண்டும்.

*ஏற்புடையதான வீதத்தைத் தீர்மானித்தல்.*

**7.** அமைச்சரால் 2 ஆம் பிரிவினதும், 5 ஆம் பிரிவினதும்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும்,–

*கட்டளை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் முதலியன.*

(i) அமைச்சர் அதற்கு அவரது கையொப்பத்தை வைத்த உடனேயே நடைமுறையில் இருத்தலும் ;

(ii) வசதிபடக்கூடியளவு விரைவாக வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் ;

(iii) அதன்பின்னர் வசதிபடக்கூடியளவு விரைவில் பாராளுமன்றத் தீர்மானத்தால் அங்கீகரிக்கப்படுதலும் ; அத்துடன்

(iv) பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாவிடில் அத்தகைய தீர்மானத்தின் தேதியிலிருந்து, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லா தொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும்,

வேண்டும்.

*கட்டளையொன்று இல்லாதொழிக் கப்பட்டதாகக் கருதப்படுவதன் பயன்.*

**8.** இரண்டாம் பிரிவின்கீழ் அல்லது 5 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று 7 ஆம் பிரிவின் (iv) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இல்லாதொழிக்கப்படு மிடத்து, கட்டளை எந்த வியாபாரப் பண்டங்களின் இனங்களைத் தொடர்புறுகின்றதோ அந்த வியாபாரப் பண்டங்களின் இனங் கள், இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நியதிகளின்படி விதிக்கப்பட்ட ஏதேனும் வரியின், தீர்வையின், அறவீட்டின் அல்லது சுங்கத்தீர்வையின் அல்லது வேறு விதிப்பனவின் கொடுப்பனவிற்கு அமைந்தனவாக வருதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**9.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை**

(பிரிவு 2 மற்றும் 7)

1. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் (பாகம் 1)
2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்
3. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் (பாகம் 1)
4. (235 ஆம் அத்தியாயம்) சுங்கச் சட்டம்
5. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்
6. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்